**அசல் வழக்கு எண்.17/2018**

**தேதி: 22.08.2025.**

**வா.சா.1: திருமதி. சாவித்திரி, க/பெ. ராமசாமி**

**9, 12 முதல் 16 வரையிலான பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி-**

தாவா சொத்தில் உள்ள 20 வது அயிட்ட சொத்து தற்போது யார் பெயரில் உள்ளது என்றால் பார்த்தசாரதி என்பவர் பெயரில் உள்ளது. 21வது அயிட்ட சொத்து தற்போது யார் பெயரில் உள்ளது என்றால் அந்த சொத்தான பேருந்தை விற்று விட்டார்கள். 22வது அயிட்ட சொத்தான பேருந்து தற்போது யார் பெயரில் உள்ளது என்றால் தற்போது யார் பெயரில் உள்ளது என்று எனக்கு தெரியாது. எந்த அடிப்படையில் தாவா அயிட்ட 21 மற்றும் 22 அயிட்ட சொத்துக்களை சேர்த்துள்ளேன் என்றால் முதலில் பேருந்துகள் இருந்தது, தற்போது விற்றுவிட்டார்கள்.

தாவா சொத்து 23வது அயிட்ட சொத்து தற்போது யார் பெயரில் உள்ளது என்றால் அதையும் தற்போது விற்றுவிட்டார்கள். தாவா சொத்து விவரத்தில் 1 முதல் 23 அயிட்ட வரையிலான சொத்துக்களில் விற்று விட்ட சொத்துக்களை தாவாவில் நீக்க வேண்டும் என்று எந்த மனுவும் போடவில்லை என்றால் சரிதான். பிரதிவாதிகள் ஜானகி, ரமணி, சுலோச்சனா, லதா, ஆதிலட்சுமி ஆகியோர்களுக்கு தனித்தனியாக 08.08.2012 அன்று செட்டில்மெண்ட் பத்திரம் எழுதி வைத்துள்ளார்கள் என்றால் சரிதான். அந்த செட்டில்மெண்ட் பத்திரத்தின் நகல்களை இந்த தாவாவில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

1வது பிரதிவாதிக்கு 1957-ல் திருமணமாகி சென்றுவிட்ட பிறகு அவர் தனியாக வாங்கிய சொத்துக்கள் என்றாலும், அவர் பெயரிலுள்ள சொத்துக்கள் அனைத்தும் அவருடைய சுயசம்பாத்திய சொத்துக்கள் என்றால் சரியல்ல.

நான் இந்த வழக்கில் முதன் முதலில் என் தந்தை எவ்வளவு பணம் வைத்திருந்தார், அதன் பிறகு எவ்வளவு சம்பாதித்து எவ்வளவு சொத்துக்கள் வாங்கினார் என்பதற்கான வரவு செலவு கணக்குகளை இந்த தாவாவில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

( 9, 12 முதல் 16 வரையிலான பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கு ஒத்தி வைக்கப்படுகிறது).

Taken down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the Plaintiffs / Defendants and admitted by the witness to be correct.

Sd./ C. Jayasree,
Additional District Judge,
Fast Track Court, Arani.